# சார்பு நீதிமன்றம், அவிநாசி

# OS – 179/2019

நாள் 10.11.2025

DW3 – N.C. மகேந்திரன்

த/பெ – சின்னச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of November 2025)**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வாதி அலமேலுவை எனக்கு தெரியும். அதேபோல், 1 முதல் 3 பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அந்த எதிர்வழக்குரையை எங்களால் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்களது எதிர்வழக்குரையில் பாரா 8–ல் 30.07.2010–ம் தேதியன்று தெய்வகுஞ்சாரம், சண்முகசுந்தரம், குமார் மற்றும் அலமேலு ஆகியோர்கள் சையத் அப்துல் ரசாத் கடையை காலி செய்த இடத்தை எனக்கும், இந்த வழக்கின் 4–ம் பிரதிவாதிக்கும் வாடகைக்கு விட்டுள்ளதாக சொல்லியுள்ளது சரியானது என்றால் சரிதான். அந்த அப்துல் ரசாத் கடையை காலி செய்த பிறகு தான் நானும், எனது அப்பா 4–ம் பிரதிவாதியும் அந்த கடையில் வாடகைக்கு வந்தோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 வாடகை ஒப்பந்த பத்திரமானது வாதி அலமேலுவின் சகோதரர் சண்முகசுந்தரமும், அப்துல் ரசாத்தும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்டது என்றால் அது எனக்கு தெரியாது. நாங்கள் 273 ச.அடி அளவு கொண்ட கடையில் தான் வாடகைக்கு வந்தோம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு நாங்கள் வாடகைக்கு வந்த போது அது 273 ச.அடி கொண்ட அளவில் இருந்ததா? அல்லது அதிக விஸ்தீரணம் கொண்டிருந்ததா? என்றால் அது எனக்கு தெரியாது. நாங்கள் தற்போதும் அந்த 273 ச.அடி கொண்ட இடத்தில் தான் வாடகைக்கு இருந்து வருகிறோம். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதியும், வாதியின் சகோதரர்களும் மற்றும் அவர்களது தாயாரும் சேர்ந்து எனது அப்பா 4–ம் பிரதிவாதிக்கு கடந்த 15.02.2011–ம் தேதியன்று அவிநாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு பொது அதிகார ஆவணத்தை எழுதி கொடுத்ததாக நாங்கள் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. அதேபோல், எங்களது எதிர்வழக்குரையில் வாக்குமூலத்தில் பாரா 8–ல் மேற்படி பொது அதிகார ஆவணத்தில் கண்ட விபரங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தில் சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தின் பேரில் எனது அப்பா 4–ம் பிரதிவாதி அந்த 15.02.2011–ம் தேதியில் யாருக்கேனும் சொத்தை விற்பனை செய்தாரா? என்றால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8 ரசீதில் பக்கம் 2–ல் இரண்டவாது பாரா கடைசியில் நாங்கள் சர்வ சுதந்திரமாக, நிராட்சைபாணியாக ஆண்டு அனுபவித்து வருகிறதுமான சொத்துக்களை விற்பனை செய்து விட்டு அதற்குண்டான தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு இதுவே ரசீது, நீங்கள் கேட்டபடி பவர் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறோம் என்ற வாசகங்கள் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த பி.வா.சா.ஆ 8 ரசீதானது பொது அதிகார ஆவணம் ஏற்பட்ட தேதியான 15.02.2011–ம் தேதியில் தான்

ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள முத்திரைத்தாளில் உள்ள தேதியும், வா.சா.ஆ.8 ரசீதில் கண்டுள்ள முத்திரைத்தாளில் உள்ள தேதியும் 14.02.2011 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு ஆவணங்களிலும் உள்ள முத்திரைத்தாள்களை எனது அப்பா 4–ம் பிரதிவாதி பெயரில் தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விற்கப்படாத சொத்திற்கு எங்களிடம் இருந்து வாதியும், வாதியின் சகோதரரும் மற்றும் அவர்களது தாயாரும் எந்தவொரு பலன்களையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.10 15:00:39 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**